DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **DVC.08/2022**

Miscellaneous : -

Deposition of **PW -1 Witness for Petitioner- Cross Continuation**

| | | |
|---|---|---|
| Name | : | **திருமதி.சர்மிளா** |
| Father's Name | : | **க.பெ ஜானகிராமன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.06.2023.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

துவக்க நேரம் 11.04

1) 1ம் எதிர்மனுதாரருக்கு உழவடை இயந்திரம் மற்றும் விவசாயம் மூலம் மாதம் ரூ.40,000/- வருமானம் வருவதாக நான் மனுவில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும், அதுபோன்று அவருக்கு எந்தவொரு வருமானமும் வரவில்லை என்றாலும் சரியல்ல, 6 ஏக்கர் நிலம் இருப்பதாகவும், உழவடை இயந்திரம் இருப்பதாகவும் சொல்லித்தான் திருமணம் செய்தார்கள், அது தற்பொழுதும் உள்ளது, நான் எதுவும் பொய் சொல்லவில்லை.

2) வழக்கிற்காக எதிர்மனுதாரர்களுக்கு நிலம் இருப்பதாகவும், உழவடை இயந்திரம் இருப்பதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது.

3) மாதம் ரூ.15,000/- கோரி நான் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னை சேர்ந்து வாழச்சொல்லி, 1ம் எதிர்மனுதாரர் ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP.72/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சேர்ந்து வாழ 1ம் எதிர்மனுதாரர் மனு செய்துள்ளதால் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க, 1ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவரல்ல என்றால் என்னால் சேர்ந்து வாழ முடியாது, அதனால் எனக்கு ஜீவனாம்சம் வேண்டும்.

4) நான் தாக்கல் செய்து குடும்ப வன்முறை வழக்கில், எதிர்மனுதாரர்கள் என்னனை கொடுமைப்படுத்தியதாக நான் சொல்லியுள்ளதும், வார்த்தையால் மனதை புன்படும்படியாக எதிர்மனுதாரர்கள் பேசியதாக நான் சொல்லியுள்ளதும் தவறு என்றாலும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் பேசவில்லை என்றாலும் சரியல்ல.

5) என் அப்பா நாராயணன், எனது கணவரிடம் "உன் பேரில் உள்ள சொத்தை விற்று எடுத்துவா, வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்துவிடு" என்று சொன்னார் என்றாலும், அதனை 1ம் எதிர்மனுதாரர் கேட்காமல் தனது பெற்றோருடன்தான் இருப்பேன் என்று சொன்னதால் 1ம் எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) எனது திருமணத்திற்காக, எனது தந்தை, எனது மாமனாரிடம் ரூ.1 இலட்சம் கடன்வாங்கித்தரச்சொல்லி கேட்டார் என்றாலும், அவ்வாறே எனது மாமனார் எனது அப்பாவிடம் ரூ.1 இலட்சம் கடன் வாங்கிகொடுத்தார் என்றாலும், அந்த பணத்திற்கான வட்டியை இன்றுவரை எனது மாமனார்தான் செலுத்திவருகிறார் என்றாலும், அந்த பணத்தை திருப்பித்தரச்சொல்லி எதிர்மனுதாரர்கள் கேட்டதால் இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7) மேற்படி கடன் தொகையை எனது கணவரின் அத்தையின் கணவரிடம் ரூ.50 ஆயிரமும், முருகன் என்பவரிடம் ரூ.50 ஆயிரமும் கடனாக பெற்று, எனது அப்பாவிடம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, என் அப்பா வாங்கவில்லை.

8) எனது கணவர், என்னையும், எனது குழந்தையும் அழைத்துச்சென்று சேர்ந்து வாழ விருப்பப்படுகிறார் என்றாலும், நான்தான் இந்த வழக்கினை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல, 1 1/2 வருடமாக என்னை தனியாக பிரிந்து

வாழச்சொல்லிவிட்டு, இப்பொழுது சேர்ந்து வாழ்வதாக 1ம் எதிர்மனுதாரர் சொல்வது ஏற்புடையதல்ல.

9) 1ம் எதிர்மனுதாரர் பலமுறை பெரியவர்கள் மூலம் என்னை சேர்ந்து வாழ அழைத்தும், நான், 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, வந்து அழைத்தார்கள், நானும் சென்று குடும்பம் நடத்தினேன், மீண்டும் என்னை கொடுமைப்படுத்தினார்கள், அதனால் நான் திரும்பி வந்துவிட்டேன்.

10) எதிர்மனுதாரர்கள் விவசாய வேலை செய்பவர்கள் என்றாலும், அவர்கள் காட்டிற்கு வேலை செய்ய சென்றுவிட்டால் நான் அவர்களுக்கு உணவு சமைத்து எடுத்துச்செல்வேன் என்றாலும், நான்தான் பரிமாறுவேன் என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம் 11.30

ஒம்/-S.முனுசாமி
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.